

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 12.09.2024 | 37. ‘தெய்வ அன்பிற்கு ஏற்படும் சவாலில்’ நம் அன்பு ஒழிந்திடக்கூடாது! |
|---|---|



**ஊ**ழியம் செய்யும்படி தேவன் நமக்குத் தந்த ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களை, தேவனுடைய பிள்ளைகளாகும்படி வழிநடத்தி.... அவர்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்! எப்படியாவது அவர்களும் சபை ஊழியத்திற்கு பயன்பட்டு, அநேகரை ஆசீர்வதிப்பதற்கு தகுதியடைவார்கள் என்றும் நம்பிக்கை கொள்கிறோம்! இவ்வித ஊழியத்தில், கடுமையான பிரயாசங்கள் எடுத்து, நம் சரீர சுகத்தைக்கூட இழந்திருக்கிறோம்! ஆனால், நாம் பாடுபட்டு உழைத்த ஜனங்களோ, எதிர்பார்த்த பலனை தராமல், நம் நம்பிக்கை யாவையும் கவிழ்த்து விடுகிறார்கள்!

இவ்வித சூழ்நிலைகளில்தான் ‘பெரும் சவாலை’ நாம் சந்திக்கிறோம். இந்நிலையில், ஆத்துமாவிற்காக உழைத்திடத் தூண்டிய தெய்வ அன்பிலிருந்து நாம் விலகிச் செல்வது நியாயமாகுமோ? அல்லது, கிறிஸ்துவின் கனிவான அன்பில் நிலைத்திருந்து, “பிதாவே இவர்களை மன்னியும்.... தாங்கள் செய்வது இன்னதென்று அவர்கள் அறியாதிருக்கிறார்களே!” என தொடர்ந்து நாம் ஜெபித்திடக் கூடுமோ? கூடும்.... நிச்சயமாய் கூடும்! ஏனெனில், தெய்வ அன்பு எக்காலத்தும் ஒழிவதில்லை!

– ரத்னம்